

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சீசன் களைகட்டி உள்ளதால் அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது. இதில் சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக குளித்து மகிழும் காட்சி.



வடசென்னை ராயபுரம் கிழக்கு பகுதி 49 வது வட்டத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பாக ஞாயிறு தோறும் சிறுவர் சிறுமிகளுக்கு விலையில்லா முட்டை பால் ரொட்டி திட்டம் நடைபெற்று வருகிறது.அதில் இந்த வாரம் 49வது வட்டத்திற்கு உட்பட்ட சஞ்சீவி ராயன் கோவில் தெருவில் கிழக்கு பகுதி நிர்வாகி வினோத்குமார் தலைமையில் 49வது வட்ட நிர்வாகி பிரதீப் முன்னிலையில் வழங்கப்பட்டது.

# சென்னை சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் ஆவடி பேருந்து நிலையம் மேம்படுத்துவதற்கான பணி: அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு. நாசர் தொடங்கி வைத்தனர்

சென்னை,ஜூலை.10

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்சா.மு. நாசர் ஆகியோர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ஆவடி பேருந்து நிலையத்தை ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான.பி.கே.சேகர்பாபு அவர்களால் 2024-2025 ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரில் ஆவடி பேருந்து நிலையத்தினை மேம்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இப்பேருந்து நிலையம் ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.90 Acres நிலப்பரப்பில், 64,700 சதுர அடியில் நிர்வாக கட்டிடம், தரைத்தளம் மற்றும் மூன்று மேல் தளங்களுடன் கட்டப்படவுள்ளது.9 கடைகள், பேருந்து நிலைய பணியாளர்களுக்கு ஓய்வு எடுக்கும் அறைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி கழிப்பறை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிக்காக தண்ணீர் சுத்தகரிப்பு நிலையம் நிறுவப்படவுள்ளன.

இவற்றுடன், 10 நான்கு சக்கர வாகனம் மற்றும் 435 இரண்டு சக்கர வாகன நிறுத்தம், 10 மாநகர பேருந்து நிறுத்தம், 12 ஓய்வுநிலை பேருந்து நிறுத்தும் வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.இப்பேருந்து நிலையம் கட்டுவதன் மூலமாக பயணிகள், சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு இடங்களுக்கு சென்று வர மிகவும் பயனுள்ளதாக அமையும். இப்பேருந்து நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.இ நிகழ்ச்சியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், முதன்மைச் செயல் அலுவலர்.அ.சிவஞானம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், ஆவடி மாநகராட்சி மேயர்.ஜி.உதயகுமார், துணை மேயர்.சூரியகுமார், மண்டலக் குழுத்தலைவர் கள்ராஜேந்திரன்,.அம்மு, ஜோதிலட்சுமி, தலைமைத் திட்ட அமைப்பாளர்.எஸ்.ருத்ரமூர்த்தி , தலைமைப் பொறியாளர்.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்.ராஜமகேஷ் குமார்,உடனிருந்தனர்.





சென்னைதியாகராயநகர்சட்டமன்றதொகுதிக்குட்பட்டபகுதிகளில்மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டபணிகள்குறித்த ஆய்வு கூட்டம் துணை மேயர் மகேஷ் குமார் தலைமையில் நடந்தது. இதில் கருணாநிதி எம்எல்ஏ, துணைஆணையர்கள் சிவகிருஷ்ணமூர்த்தி, கவுசிக், மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டனர்.

# புழல் பகுதியில் டூரிஸ்ட் வேன் கண்ணாடி உடைப்பு: ஒருவர் கைது

சென்னை ஜூலை 10-

சென்னை, புழல், திருப்பூர் குமரன் தெரு பகுதியில் வசித்து வரும் அண்ணாமலை, என்பவர் டூரிஸ்ட் வேன் ஓட்டி வருகிறார். இவர் கடந்த 7 ந் தேதி அன்று அதிகாலை, அவரது வீட்டின் அருகில் உள்ள வெங்கடேசன் என்பவரின் வீட்டின் முன் டூரிஸ்ட் வேனை நிறுத்தி வைத்து விட்டு தூங்க சென்றுள்ளார். சிறிது நேரத்தில் வெங்கடேசன் மேற்படி அண்ணாமலை நிறுத்தி வைத்திருந்த டூரிஸ்ட் வேனின் கண்ணாடியை இரும்பு கம்பியால் உடைத்து சேதப்படுத்தியுள்ளார். சத்தம்கேட்டு எழுந்து வந்த அண்ணாமலை , ஏன் வாகனத்தின் கண்ணாடியை உடைத்தாய் என வெங்கடேசனிடம் கேட்ட போது, அவர் வீட்டின் முன் வாகனத்தை நிறுத்தியதால் கண்ணாடியை உடைத்தேன் என கூறி தகராறில் ஈடுபட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து, அண்ணாமலை புழல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி வெங்கடேசன், என்பவரை கைது செய்தனர்.

# வெளிநாட்டு நபரை தாக்கி பணம் மற்றும் செல்போன் பறித்த வழக்கில் 2 பேர் கைது

. சென்னை ஜூலை 10-

நேபாள நாட்டைச்சேர்ந்த பிரேம்குமார், வ/34, த/பெ.கியான் ராஜ் ஆலே என்பவர் சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் தங்கி மெசின் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறார். பிரேம்குமார் மும்பையில் உள்ள அவரது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால், அவரை பார்த்து வர, கடந்த 04.ந் தேதி அன்று மாலை சென்டிரல் இரயில் நிலையத்தில் மும்பைக்கு செல்ல பயணச்சீட்டு பதிவு செய்துவிட்டு, இரயில் நிலையம் வெளியே நின்று கொண்டிருந்த அறிமுகமில்லாத 2 ஆட்டோ ஓட்டுநர்களிடம் சென்று மதுபானக் கடை எங்குள்ளது என்று விசாரிக்க, இருவரும் பிரேம்குமாரை ஒரு ஆட்டோவில் மதுபானக் கடைக்கு அழைத்துச் சென்று மது வாங்கிய பின் சென்டிரல் இரயில் நிலையம் அருகே ஆட்டோவை நிறுத்திவிட்டு மூவரும் ஒன்றாக சேர்ந்து மது அருந்தியுள்ளனர். பிரேம்குமார் அவர்களிடம் முன்பதிவு செய்த இரயில் பயணச்சீட்டினை உறுதி செய்து கொடுக்க உதவி கேட்டுள்ளார். இருவரில் ஒருவர் உதவி செய்வதாக கூறிவிட்டு, பிரேம்குமாரின் செல்போனை வாங்கி சென்றுள்ளார். அந்த நபர் வெகு நேரம் ஆகியும் வராததினால், அவருடன் இருந்த மற்றொரு ஆட்டோ ஓட்டுநர் அவரிடம் அழைத்துச் செல்வதாக கூறி, பிரேம்குமாரை அவரது ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஒரு நபரை ஏற்றிக் கொண்டு சிறிது தூரம் சென்றபின் ஆட்டோவை நிறுத்திவிட்டு, இருவரும் சேர்ந்து பிரேம்குமாரை கீழே இறக்கி, தாக்கி, மிரட்டி, பிரேம்குமாரிடம் இருந்த பணம் ரூ.2,500/-ஐ பறித்துக் கொண்டு, ஆட்டோவில் தப்பிச் சென்றனர். மேற்படி செல்போனையும் மற்றும் பணத்தையும் பறித்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிரேம்குமார் பூக்கடை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். பூக்கடை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.விஷ்ணுபிரகாஷ், கார்த்திகேயன், ஆகிய இருவரையும் கைது செய்தனர்.



சென்னை மாநகராட்சி 6 வார்டுகளில் நடைபெற உள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கான விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் கையேட்டினை தன்னார்வலர்கள் மூலம் வீடு,வீடாக வழங்கும் பணி நடைபெற்றது.

# பராமரிப்பு பணி: சென்னையில் இன்று மின்தடை

சென்னை ஜூலை 10-

அம்பத்தூர், அடையாறு, தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் இன்று மின்வாரிய பராமரிப்பு பணி நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: சென்னையில் இன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். மதியம் 2 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.


அம்பத்தூர்: கேலக்ஸி சாலை, பெரியார் தெரு, சிவபதம் தெரு.திருமுல்லைவாயல்: அம்பேத்கர் நகர் பிரதான சாலை, ஆட்டந்தாங்கல், பாலமுருகன் நகர், பிள்ளையார் கோயில் தெரு, கண்ணன்கோயில், ஆட்டந்தாங்கல் பாலம், கே.கே.நகர், சிவந்தி ஆதித்தனார் நகர், பெருமாள்நகர், வி.பி.ஆர்.நகர், சக்திநகர்.அடையாறு: பெசன்ட்நகர் 6 முதல் 15வது குறுக்குத் தெரு, 1வது, 2வது பிரதான சாலை, ஆர்பிஐ குடியிருப்பு, கக்கன் காலனி, 4வது, 16வது, 29வது குறுக்குத் தெரு, 2வது, 3வது, 7வது அவென்யூ, டைகர் வர்தாச்சாரியார் சாலை.

சோழிங்கநல்லூர்: ராஜேஷ் நகர், ஆதிபுரீஸ்வரர் தெரு, அஷ்டலட்சுமி நகர், கோவலன் நகர், வேளச்சேரி பிரதான சாலை, பெரியார் நகர், கவிமணி தெரு, ஓம்சக்தி நகர், வெங்கடேஸ்வரா நகர், தாமரை தெரு, சோமு நகர், தேவி கருவிழி நகர், யுனைடெட் காலனி, பெல் நகர் 4, 5 வது குறுக்கு தெரு, புஷ்பா நகர்.

தாம்பரம்: மாடம்பாக்கம் பிரதான சாலை, சுதர்சன்நகர், விஜிபி, சரவணாநகர், ஸ்ரீதேவிநகர், அரவிந்த்நகர், கருமாரி அம்மன் நகர், அம்பிகாநகர், காயத்திரி கார்டன், பார்வதிநகர், சிவசக்திநகர், சீனிவாசநகர், சுந்தர் அவென்யூ, ரூபி.

கோயம்பேடு மார்க்கெட்: ஜெயலட்சுமி நகர், தனலட்சுமி நகர், மூகாம்பிகை நகர், பாலகிருஷ்ணா நகர், ராஜீவ்காந்தி நகர், ஜானகிராம் நகர், புவனேஸ்வரி நகர், ராமலிங்கநகர், தாமரை நகர் ஆகிய இடங்களில் நாளை மறுநாள் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் தடை செய்யப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் மருத்துவர்களுக்கு பாராட்டு விழா




திருவொற்றியூர் ஜூலை 10

தேசியமருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கிளப் சார்பில் சென்னையில் உள்ள தனியார் விடுதியில் லயன்ஸ் கிளப் சார்பில் மருத்துவர்களுக்கு பாராட்டு விழா லயன் வேணுகோபால் லைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக லயன் பி.மணி சேகர், தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதாரசேவைகள் இயக்குநர் லயன் டாக்டர் ஜே.ராஜமூர்த்தி, லயன் அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ , லயன் ஏ.டி.ரவிச்சந்திரன், லயன் ஆர்.நரசிம்மன், லயன் ஆர்.பி.ஜெயக்கொடி, லயன் ஆர்.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றி மருத்துவர்களுக்கு சால்வை அணிவித்து விருது வழங்கி பாராட்டினர். முன்னதாக பட்டிமன்ற பேச்சாளர் புலவர் மு.ராமலிங்கம் மனித வாழ்வில் மருத்துவர்கள் எவ்வளவு முக்கியம் என்பது குறித்து விளக்கி பேசினார்.இவ் விழாவில் மூன்று உலக சாதனை விருது பெற்ற திருவொற்றியூரை சேர்ந்த பிரபல ஆயுர்வேத மருத்துவர் நடிகர் டாக்டர்ஜி.ராஜகுமாருக்கு வாழ்நாள் சாதனைமருத்துவர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 150க்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இதில் அம்மை அப்பர் சேவை மையம் நிறுவனர் ஏசிஎல்சீனிவாசன் லயன்கே.எஸ்.கோபி , வழக்கறிஞர் சரவணன் உட்பட லன்ஸ் கிளப் சங்க நிர்வாகிகள் , மருத்துவர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.


**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **D. MALAVIKA D/o. Dhakshanamoorthy, Date of Birth : 09.02.2001, Permanently Residing at : H.No. 112 , Pavendar Street, Leigh Bazaar (PO), Salem District, Tamilnadu - 636 009.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**D. MALAVIKA**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **PRIYA .N W/o. Jayaprakash .J, Date of Birth : 11.01.1986, Permanently Residing at : D.No. 101/57A, Gundu Pillaiyar Kovil Street, Vinayagar Nagar, Ammapettai, Salem District, Tamilnadu - 636 003.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**PRIYA .N**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **PRIYANKA .S D/o. T. Subramani, Date of Birth : 02.06.1999, Permanently Residing at : D.No. 61, No.2 Pudu Street, Kitchipalayam, Salem, Salem District, Tamilnadu - 636 015.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**PRIYANKA .S**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **HEMASURUTHI .A.S D/o. A. Solaiazhagan, Aged 22 Years, Permanently Residing at : D.No. 23/18, Kullar Street, Manakkadu, Hasthampatti, Salem District, Tamilnadu - 636 007.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**HEMASURUTHI .A.S**

**பொது அறிவிப்பு**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இரா.பட்டணம் அஞ்சல், கருப்பனார் கோவில் தோட்டம், க.எண்.37/24C என்ற முகவரியில் வசிக்கும் வழக்கறிஞர் D.குமரவேல் ஆகிய நான், எனது கட்சிக்காரரான நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் டவுன், கோனேரிப்பட்டி Ex.No.2, கதவு எண்.45A/1 என்ற முகவரியில் வசிக்கும் P.முத்துசாமி அவர்களின் மகன் M.ரவி (60) அவரின் தகவல் பெற்று கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில், இராசிபுரம் டவுன், அண்ணாசாலை, க.எண்.230A என்ற முகவரியில் வசிக்கும் A P சரோஜா அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களானது அவருடைய தாயார் நாகலட்சுமி அவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட உயில் சாசன ஆவண எண். BK3/20/1996-ற்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை எனது கட்சிக்காரர் விலைபேசி கிரையம் வாங்க இருப்பதால் அதன் மீது ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 5 ஐந்து தினங்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரம்

நாமக்கல் டி (முன்பு சேலம் டி) இராசிபுரம் சப்டி, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட இராசிபுரம் டவுன், முன்பு வார்டு எண்.14 ஆகவும், பின்பு வார்டு எண்.17 ஆகவும் இருந்து தற்போதைய இராசிபுரம் நகராட்சி வரிவிதிப்பின் படி வார்டு எண்.21-க்குச் சம்மந்தப்பட்ட அறிஞர் அண்ணாசாலையில் (ஆத்தூர் ரோடு) இதில் முன்பு இராசிபுரம் கிராம G.R சர்வே எண்.272/1 இதில் ஒரு பாகமாகவும், பின்பு இராசிபுரம் டவுன் சர்வேபடி பட்டா எண்.788, வார்டு ‘C’, பிளாக் எண்.10, நகரபுல எண். 79/1 இதில் ஒரு பாகமாகவும் அதன்பின்பு இராசிபுரம் டவுன் சர்வேபடி வார்டு ‘C’ பிளாக் எண்.10 நகரபுல எண். 79/1B பரப்பு 0.0113.0 சதுரமீட்டர் இதற்கு தீ.ரூ.5.00 இது பூராவுமாக உள்ளது. இதுவும் மற்றும் இராசிபுரம் டவுன் சர்வேபடி வார்டு ‘C’, பிளாக் எண்.10, நகரபுல எண். 79/3 பரப்பு.0.0034.5 சதுரமீட்டர் இதற்கு தீ.ரூ.5.00 இதில் ஒரு பாகமாக உள்ளது.

D.குமரவேல் M.Sc.,LLB.,
வழக்கறிஞர், க.எண்.37/24C, கருப்பனார் கோவில் தோட்டம்,
இரா.பட்டணம் அஞ்சல்,
இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம். செல்-8056789923.

தமிழ்நாடு அரசு
**திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

| ந.க.எண். 214/ 2025 / அ1 | மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 09.07.2025 |
|---|---|---|

கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி இயக்கம் மற்றும் பராமரிப்பு O&M 2025-2026 திட்டம் 2025-2026 ன் கீழ் ரூ.220.00 இலட்சம் மதிப்பீட்டில் தும்பகோடு கிராமம் றி சர்வே எண் 368/2 ல் பேருந்து நிலையம் மேம்பாடு செய்தல் பணி மேற்கொள்ள மறுஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 28.07.2025 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மறுஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற மறுஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4.00 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் **E-Token / Digital Signature Card** உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

**செ.ம.தொ.இ /3547/ ஒப்பந்தப்புள்ளி / 2025**

**தலைவர்,** **திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி,** **கன்னியாகுமரி மாவட்டம்.**

**செயல் அலுவலர்,** **திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி,** **கன்னியாகுமரி மாவட்டம்.**

தமிழ்நாடு அரசு
**ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சி, வேலூர் மாவட்டம்,**

| ந.க.எண். 129/ 2025 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 09.07.2025 |
|---|---|---|

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் **(KNMT) 2025-2026**- திட்டத்தின் கீழ் **ரூ.291.00 இலட்சம்** மதிப்பீட்டில் வாரச்சந்தை மேம்பாடு செய்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 15.07.2025-ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 15.07.2025-ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை **https://tntenders.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதளம் மூலம் **E-Token /Digital Signature card** உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர், ஒடுகத்தூர் பேரூராட்சி, வேலூர் மாவட்டம்.**

**செ.ம.தொ.இ /3528/ ஒப்பந்தப்புள்ளி / 2025**

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
ஒப்பந்தம்-C-FORM/ ITEM RATE (இணையதள முறையில் மட்டும்)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு ந.க.எண்.18/2025–2026/(க&பெ)-1/சென்னை/நாள்: 08.07.2025

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு | ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை / பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி | 
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சென்னை–10, கீழ்ப்பாக்கம், IMH-இல் உள்ள தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனத்திற்கான (TNIMHANS) சிறப்பு மையக் கட்டடத்தில் கூடுதல் மின் வசதிகளை செய்யும் பணி | ரூ. 125.00 இலட்சம் | ரூ.73,000/- 4 (நான்கு) மாதங்கள் | with ESB License holders |

**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,** கட்டட கட்டுமான மற்றும் பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை–5.

செ.ம.தொ.இ / 3504 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு / **பொதுப்பணித்துறை**
கட்டட (க & ப) வட்டம், திருவாரூர் – 1.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 11/க (க & ப) வட்டம்/திருவாரூர்/2025-26/ நாள்: 08.07.2025

1. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் **https://tntenders.gov.in** என்ற இணையதளம் முலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள்: **14.07.2025** முதல் **28.07.2025** பிற்பகல் **3.00** மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்: **28.07.2025** பிற்பகல் **3.00** மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **29.07.2025** முற்பகல் **11.00** மணி முதல்.

**கண்காணிப்புப் பொறியாளர், பொது., கட்டட (க & ப) வட்டம், திருவாரூர் – 1.**

செ.ம.தொ.இ/3501/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (க&பரா) வட்டம், மதுரை-625002

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.15அ/2025-2026 / நாள்.08.07.2025

1. இரண்டு மின் பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் முலமாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் **15.07.2025** முதல் **30.07.2025** மாலை **3.00** மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்: **30.07.2025** மாலை **3.00** மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் முலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: **30.07.2025** மாலை **3.30** மணிக்கு.
5. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் அனுப்ப கடைசி நாள்: **25.07.2025**
6. மதிப்பீட்டு ஆவணங்கள் திறக்கப்படும் நாள்: **29.07.2025**

**கண்காணிப்புப் பொறியாளர், பொது., கட்டட (க&பரா) வட்டம், மதுரை**

செ.ம.தொ.இ/3494/ஒப்பந்தப்புள்ளி/2025

# தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தில் 7 புதிய பேருந்து சேவைகள்

## கலெக்டர் ரெ.சதீஸ், ஆ.மணி எம்.பி. துவக்கி வைத்தனர்



**தருமபுரி,ஜூலை.10-**

தருமபுரி புறநகர்ப் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரை, தருமபுரி மண்டலம் சார்பில் மகளிர் விடியல் பயணம் செய்யும் பேருந்து சேவையை 4 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு மற்றும் வழித்தட மாற்றம் செய்து இயக்கப்படும் பேருந்து சேவைகள் மற்றும் தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பேருந்துகளுக்குப் பதிலாக 7 புதிய பேருந்து சேவைகளை கலெக்டர் ரெ.சதீஸ், மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி கொடியசைத்து துவக்கிவைத்தனர்.

இதுகுறித்து கலெக்டர் ரெ.சதீஸ், தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் கடந்த நான்காண்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரை, தருமபுரி மண்டலம் சார்பில் தருமபுரி மாவட்டத்தில் 6 புதிய வழித்தடங்கள் மற்றும் 101 வழித்தட நீட்டிப்பு/வழித்தட மாற்றம் என மொத்தம் 107 வழித்தடங்களில் 127 பேருந்துகள் மூலம் 286 கிராம, நகரங்களில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 2,71,963 பேர் பயன் பெறுகின்றனர்.

மேலும், பழைய புறநகர் பேருந்துகளுக்குப் பதிலாக 31 புதிய பேருந்துகள், 45 புனரமைப்புப் பேருந்துகள் என மொத்தம் 76 பேருந்துகளும், மகளிர் விடியல் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 20 புதிய பேருந்துகள், 15 புனரமைப்புப் பேருந்துகள் என மொத்தம் 35 பேருந்துகளும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து, இன்றைய தினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரை, தருமபுரி மண்டலம் சார்பில் தருமபுரி முதல் சின்னம்பள்ளி செல்லும் பேருந்தினைக் கூடுதலாக இரவில் ஒரு நடை சின்னம்பள்ளி செல்லுமாறு இயக்குதல், தருமபுரி முதல் பாப்பாரப்பட்டி செல்லும் பேருந்தினைப் பிக்கம்பட்டி வழியாக இயக்குதல், பென்னாகரம் முதல் தின்னூர் செல்லும் பேருந்தினை M.K.S நகர் மாரியம்மன் கோயில் வரை நீட்டித்து இயக்குதல், பென்னாகரம் முதல் ஏரியூர் செல்லும் பேருந்தினைக் கொட்டநண்டுகாடு, அஜ்ஜனஅள்ளி வழியாக இயக்குதல் உள்ளிட்ட மகளிர் விடியல் பயணம் செய்யும் 4 வழித்தடம் நீட்டிப்பு / வழித்தட மாற்றம் செய்து இயக்கப்படும் பேருந்து சேவைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் 10 கிராமங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 11,050 பேர் பயன்பெறுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், தருமபுரி மண்டலப் பொது மேலாளர் க.செல்வம், தருமபுரி நகர்மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகராட்சி ஆணையாளர் சேகர், நகர்மன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# சேலம் மாவட்டம்

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஊதியம் பெறும் வங்கி சேமிப்பு கணக்கை பராமரிக்க வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்த விழிப்புணர்வுக் கூட்டம்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,ஜூலை.10-**

தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஊதியம் பெறும் வங்கி சேமிப்பு கணக்கை சம்பளக் கணக்காக பராமரிக்க ஏழு பட்டியலிடப்பட்ட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதை தொடர்ந்து விழிப்புணர்வுக் கூட்டம் கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தலைமையில் ஆட்சியர கூட்டரங்கில் 08.07.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சம்பளம் பெறும் வங்கி சேமிப்பு கணக்கை சம்பள கணக்காக மாற்றுவதனால் வாழும் போதும், வாழ்ந்த பிறகும் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பம் பயனடையும் சிறப்பு சலுகைகள் மற்றும் பயன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அரசு ஊழியர் விபத்தில் மரணமடைந்தாலோ அல்லது நிரந்தர ஊனம் அடைந்தாலோ ரூ.1 கோடி ரூபாய் இழப்பீடும், குறைந்தபட்ச ஆயுள் காப்பீடு ரூ.10 இலட்சம் (பணியின் போது இயற்கை மரணம்), விபத்தில் மரணம் அடைந்த அரசு ஊழியர்களின் ஒரு மகளுக்கு ரூ.10 இலட்சம், இரண்டு மகள்கள் இருந்தால் தலா ஐந்து இலட்சம் திருமண உதவித்தொகை, விபத்தில் மரணம் அடைந்த அரசு ஊழியர்களின் மகளின் உயர்கல்விக்கு ரூ.10 இலட்சம் உதவித்தொகை (இச்சலுகைகளை பெற கட்டணம் / பிரிமியம் / சந்தா எதுவும் இல்லை) போன்ற சலுகைகள் பட்டியலிடப்பட்டுள்ள வங்கிகளில் தங்களது ஊதிய கணக்கினை பராமரிக்கும் அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

பிற வங்கிகளில் ஊதிய கணக்கினை அரசு ஊழியர்கள் பராமரிப்பதில் எந்தவித தடையும் இல்லை. ஆனால் இச்சலுகைகள் கிடைக்கப்பெறாது. வங்கிகள் வாரியாக வழங்கப்படும் சலுகை விவரங்களை எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில் களஞ்சியம் (www.karuvoolam.tn.gov.in/wen/tnta/cabpb) CABPB-TNTA - Kalanjiyam இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட கருவூல அலுவலர் சீ.ஸ்ரீதர் மூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) செ. பூவண்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், வங்கி மேலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

# மொரப்பூர் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்வியே ஆயுதம் கருத்தரங்கம்

**மொரப்பூர்,ஜூலை.10-**

தர்மபுரி மாவட்டம்,மொரப்பூர் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்வி ஆயுதம் தன்னம்பிக்கை கருத்தரங்கு நடைபெற்றது.இந்நிகழ்ச்சிக்கு கொங்கு கல்வி அறக்கட்டளையின் தலைவர் அ.தீர்த்தகிரி தலைமை வகித்து கருத்தரங்கை துவக்கி வைத்தார்.கொங்கு கல்வி அறக்கட்டளை செயலாளர் ஆர். பிரபாகரன்,பொருளாளர் ஆர்.நாகராஜ், கொங்கு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிபிஎஸ்இ பள்ளி தாளாளர் தீ.சந்திரசேகர்,கொங்கு கலை அறிவியல் கல்லூரி தாளாளர் பி.வரதராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கல்லூரி முதல்வர் என்.குணசேகரன் வரவேற்று பேசினார். இக்கருத்தரங்கில் சென்னை இந்தியன் மியூசிக்,பிளைன்ட்னஸ் அண்ட் வித் ஐ கியூ ஆஃப் எ 9 இயர்ஸ் ஓல்ட் கிட், பிரசிடெண்ட் ஆப் இந்தியா அவார்டு,ரோல் மாடல் 2021 ஆகிய விருதுகளை பெற்ற ,ஜோதி கலைச்செல்வி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு

கல்வியே ஆயுதம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.அட் 1330 திருக்குறள்களிலும் அதிகாரம் மற்றும் குறளின் வரிசை எண்ணை சொன்னால் அந்த திருக்குறளை இசையுடன் பாடலாக பாடி தனது திறமையை வெளிப்படுத்தினார். மேலும் தினசரி காலண்டரில் உள்ள எந்த மாதத்திலும் உள்ள எந்த தேதியை சொன்னாலும் அதன் கிழமையை சரியாக சொல்கிறார்.சினிமா பாடல்களை வயலின் இசைக்கருவியில் வாசித்தார். இரு கண்களையும் பிறவியிலேயே இரு கண்களையும் இழந்த ஜோதி கலைச்செல்வி நினைவாற்றல், பாடல், இசைத்தல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கி இந்தியா மட்டுமில்லாமல் அயல் நாடுகளுக்கும் iசென்று தனது திறமையை வெளிப்படுத்தி வரும் ஜோதி கலைச்செல்வியை கொங்கு கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள் பாராட்டி பரிசுகள் வழங்கினார்கள்.நிகழ்ச்சியில் கொங்கு கல்வி அறக்கட்டளை இயக்குனர்கள் எஸ்.கணேசன்,எஸ் வெற்றிசெல்வன், எம்.குணசேகரன்,டி ஞானச்செல்வன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பேராசிரியர்கள் உள்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# தர்மபுரியில், உணவு பாதுகாப்பு துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் இணைந்து திடீர் ஆய்வு



**தர்மபுரி,ஜூலை.10-**

தர்மபுரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் நடமாட்டத்தை அறவே தடுக்க மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ்.,ஐ.ஏ.எஸ்., , உணவு பாதுகாப்புத்துறை, நகராட்சி மற்றும் உள்ளாட்சி துறை, காவல் துறை இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு கண்காணித்து விற்பனையை தடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டதன் அடிப்படையில், தர்மபுரி நகராட்சி பகுதிகளில் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ்குமார், எம்.பி.,பி.எஸ்., தலைமையில் நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் மற்றும் தர்மபுரி நகராட்சி நகர் நல அலுவலர் மருத்துவர். லட்சியவர்ணா,நகராட்சி பணியாளர்கள் இணைந்து தர்மபுரியில் கந்தசாமி வாத்தியார் தெரு, எஸ்.வி.ரோடு, வெளிப்பேட்டை தெரு உள்ளிட்ட வீதிகளில் ஆய்வில் ஈடுபட்டனர். அதில் வெளிப்பேட்டை தெருவில் அங்காளம்மன் கோயில் அருகில் ஒரு சிறு பெட்டி மளிகை கடையில் புகையிலை பொருட்கள் இருப்பதற்கான அறிகுறி இருந்தது.தீவிர விசாரணையில் கடையின் அருகில் கடை உரிமையாளருக்கு சொந்தமான ஒரு சிறிய பூட்டிய வீட்டை திறக்க செய்து ஆய்வு நடத்தியதில் தடை செய்யப்பட்ட புகையிலை ஹான்ஸ்,விமல் பான் மசாலா வி1 டொபோக்கோ உள்ளிட்ட புகையிலை பொருட்கள் நான்கு கிலோ அளவிளானது கண்டெடுத்து பறிமுதல் செய்யப்பட்டது. கடை உரிமையாளர்களுக்கு உடனடி அபராதம் ரூபாய்.25000 விதித்து கடை 15 தினங்கள் இயங்க தடை விதித்து உடனடியாக கடையடைக்கப்பட்டு எச்சரிக்கை நோட்டீஸ் நியமன அலுவலரால் கடை விற்பனையாளருக்கு வழங்கப்பட்டது.

# சேலம் விநாயகா மிஷன் அலைய்டு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் தொலைபேசி நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி




**சேலம்,ஜூலை.10-**

சென்னை சிஏஜி சார்பில் சேலம் விநாயகா மிஷன் அலைய்டு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் தொலைபேசி நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அலைய்டு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி டீன் டாக்டர் செந்தில் குமார் வரவேற்பு ஆற்றினார்.

நுகர்வோர் உரிமைகள் இயக்கம் நிறுவனர் பூபதி விழிப்புணர்வு உரை ஆற்றினார்.ஹில் சிட்டி ரோட்டரி சங்க தலைவர் பத்மநாபன், செயலாளர் கௌதம் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சி துவக்கி வைத்தனர்.

சேலம் முதன்மை வங்கி மேலாளர் செந்தில் குமார், வங்கி சேவைகள் மற்றும் சைபர் கிரைம் பற்றிய விழிப்புணர்வு உரை ஆற்றினார். சிஏஜி ஆராய்ச்சியாளர் சுப்ரமணியம் தொலை தொடர்பு குறித்த விழிப்புணர்வு உரை ஆற்றினார் பேசினார். பிஎஸ்என்எல், ஏர்டெல், ஜியோ, வோடாபோன் தொலை தொடர்பு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் வெங்கடேசன், இராசிபுரம் பூபதி மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# கிருஷ்ணகிரி மாவட்டம் உட்டம், ரெட்டிப்பட்டி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது



**கிருஷ்ணகிரி,ஜூலை.10-**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் உட்டடம், ரெட்டிப்பட்டி கிராமத்தில், மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலையர் ச.தினேஷ் குமார் தலைமையில் (09.07,2025) அன்று நடைபெற்றது. கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சமீபகாலமாக மக்கள் அரசாங்கத்தை தேடி வந்து அவர்களுடைய குறைகளை போக்கிக் கொள்வதுடன் சேர்த்து, அரசே மக்களை தேடி வந்து அரசாங்கத்தின் சேவைகளை அளிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துக் கூறி அத்திட்டங்கள் மூலம் பொதுமக்கள் எவ்வாறு பயனடைய முடியும் வரிபதை நேரடியாக துறை சார்ந்த அலுவலர்கள் விளக்கம் அளிக்கும் வகையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது. இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பல்வேறு துறைகள் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவது குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொதுமக்களுக்கு நேரடியாக எடுத்துரைக்கப்பட்டது.

கட்டுமான தொழிலாளர்கள் தொடர்ந்து 3 வருடங்களுக்கு நல வாரியத்தில் உறுப்பினராக இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியம், சொந்தமாக நிலம் இருந்தால் வீடு கட்ட ரூ.4 இலட்சம் வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் கலெக்டர் சதினேஷ் குமார் தெரிவித்தார். தொடர்ந்து, மக்கள் தொடர்பு திட்ட முகாமில், கலெக்டர் , வருவாய்த்துறை சார்பாக, 137 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 37 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டா ஆணைகளும், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பாக, 20 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 93 ஆயிரத்து 500 மதிப்பில் இயற்கை மரணம், திருமணம், தற்காலிக இயலாமைக்கான மாதாந்திர உதவித்தொகைக்காள காசோலைகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பாக, 4 பயனாளிகளுக்கு ரூ.18.80 மதிப்பில் இலவச சலவைப் பெட்டிகள், வேளாண் பொறியல் துறை சார்பாக, 1 பயனாளிக்கு ரூ.10 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்பில் வேளாண் உபகரணம், வேளாண்மைத் துறை சார்பாக, 6 பயனாளிகளுக்கு ரூ.68,250 மதிப்பில் துவரை குழித்தட்டு நாற்று நடவு தொகுப்பு. மினி கிட் (துரை) உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறை சார்பாக, 5 பயனாளிகளுக்கு ரூ. 12, 180 மதிப்பில் தென்னை கன்றுகள், காய்கறி விதைகள், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக, 5 பயனாளிகளுக்கு ரூ.12 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் முதல்வரின் வீடுகள் மறுபுணரமைப்பு, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், விடு கட்டுமான பணிகளுக்கான ஆணைகள், மாவட்ட வழங்கள் துறை சார்பாக, 100 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள், மாவட்ட தொழில் மையம் சார்பாக, 1 பயனாளிக்கு ரூ.50 ஆயிரம் மானியத்தில் தையல் தொழில் அமைப்பதற்கான காசோலை மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.32,398 மதிப்பில் திறன்பேசிகள், தாட்கோ சார்பாக, சந்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வள்ளிக் கொடி மகளிர் குழுவிற்கு ரூ.62 இவட்சம் மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்ட சமுதாய கூடத்திற்கான சாவி என பொத்தம் 282 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 27 இலட்சத்து 67 ஆயிரத்து 208 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, கலெக்டர் ஊத்தங்களை வட்டாரத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வட்டார இயக்கம் மேலாண்மை அலகு சார்பாக செயல்பட்டு வரும் பாலின வள மையம் வானவில் மையத்தை நேரில் பார்வையிட்டு, இம்மையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகளின் விபரங்களை கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சா.தனஞ்செயன், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் ரமேஷ் குமார், தோட் டக் க லைத் துறை இணை இயக்குநர் இந்திரா, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொ) காளியப்பன், வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் சந்திரா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பத்மலதா, மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி பாசினி, உதவி இயக்குநர் (நில அளவை) ராஜ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மகாதேவன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பிரான்ன பாலமுருகள், மாற்றுத்திறனாளி நல அலுவலர் முருகேசன், மாவட்ட பொது மேலாளர் (தாட்கோ) வேல்முருகன், வட்டாட்சியர் மோகன்தாஸ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலாஜி, தவமணி,பொறியாளர் சபாரத்தினம், நீர்வளத்துறை உதவி பொறியாளர் ஜெயகுமார், வேளாண்மை உதவி இயக்குனர் வானதி வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர் கலந்து கொண்டனர்




**கிருஷ்ணகிரி மாவட்டம் மோரனப்பள்ளி கிராமத்தில் கனிமங்கள் மற்றும் குவாரிகள் நிதியிலிருந்து சுமார் 49 லட்சத்து 96 ஆயிரம் மதிப்பில் தார்சாலை அமைப்பதற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் நாகேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரவி, சம்பத் கலந்து கொண்டனர்.**



**கர்கோதா சோனிப்பேட், ஹரியானாவில் யூத் கேம் பெட்ரேஷன் - இந்தியா நேஷனல் சிலம்பம்போட்டியில்நாமக்கல்மாவட்டம்,பள்ளிபாளையத்தைசேர்ந்தசி.கமலக்கண்ணன்செ. அருண்குமார் ஆகிய இருவரும் கலந்துகொண்டு தங்கபதக்கம் வென்றனர். அவர்கள் முன்னாள் அமைச்சர் பி.தங்கமணியை சந்தித்து பதக்கங்கள் மற்றும் சான்றிதழ் காட்டி வாழ்த்து பெற்றனர். நகர செயலாளர் பி.எஸ்.வெள்ளிங்கிரி, ஐ.டி.விங் செயலாளர் சுரேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.**

# திருச்சி மாவட்டத்தில் குரூப்-4 எழுத்துத்தேர்வு நடைபெற உள்ளது

## கலெக்டர் வே.சரவணன் தகவல்

**திருச்சி,ஜூலை.10-**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் 197 தேர்வு மையங்களில் 55,456 தேர்வர்கள் இத்தேர்வினை எழுத உள்ளனர். இத்தேர்வு பணிகளுக்கென 197 தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்போட்டித் தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள் உள்ளிட்ட தேர்வு பொருட்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள 66 இயங்கு குழுக்கள் (ஆழடிடைந ருnவை) அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் துணை வட்டாட்சியர் நிலையில் ஒரு அலுவலர், துப்பாக்கி ஏந்திய காவலர் ஒருவர் ஆகியோர் இயங்குவர். தேர்வு மையங்களை திடீர் ஆய்வு செய்ய துணை ஆட்சியர் நிலையில் 11 பறக்கும் படை (குடலiபெ ளுஙரயன) அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வு மையத்தினை கண்காணித்திட 197 ஆய்வு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து தேர்வு மையங்களுக்கும் காவல்துறை பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்கள் தேர்வு மையங்களுக்கு சென்று வர சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. தேர்வர்கள் செல்லிடைப்பேசி, புளூடுத், டிஜிட்டல் கடிகாரம் உள்ளிட்ட மின்னணு சாதன பொருட்களை தேர்வு மையங்களுக்கு எடுத்துவர அனுமதி இல்லை என்றும், காலை 09.00 மணிக்கு பின்னர் தேர்வு மையத்திற்கு வரும் தேர்வர்களை எந்த காரணத்தினை முன்னிட்டும் அனுமதிக்க முடியாது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி கலெக்டர் வே.சரவணன், தெரிவித்துள்ளார்.

# பெரம்பலூர் மருவத்தூர் கிராமத்தில் ஊர் சுத்தியான் கோவில் மகா கும்பாபிஷேகம்

**பெரம்பலூர்,ஜூலை.10-**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் மருவத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அய்யனார், ஸ்ரீ மோடையான் சாமி ஆலய வளாகத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஊர்சுத்தியான் சுவாமி, ஸ்ரீ பாலாயி அம்மன், ஸ்ரீ கருப்பண்ண சுவாமி, ஸ்ரீ நொண்டி கருப்பு சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்கு 8-7 - 25 அன்று காலை 10.45 மணி முதல் 11.45 மணிக்கு குடியளைத்து மாலை 4.45 மணிக்கு மேல் 5.4 5 மணிக்கு தீர்த்தக்குளம் ,தேவதைகள் பிரார்த்தனை ,

ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாஜனம் வாஸ்து சாந்தி,காலகர்ஷணம், முதல் காலயாக பூஜை , பூர்ணாஹீதி மஹா தீபாரதணை பிரசாதம் வழங்கப்பட்டது .இரவு புதிய மூர்த்திகள் அஷ்டபந்தனம் சாற்றப்பட்டது . அதனை தொடர்ந்து 9 - 7- 25 அன்று காலை 6 .00 மணிக்கு இரண்டாம் கால பூஜை திவ்யா ஹீதி, மஹா பூர்ணாஹுதி, மகா தீபாரதணை தேவாரத்தினை நடைபெற்றது

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

